மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய ஊராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் என்னிடத்திலே அந்த விவரம் இல்லை. இது ஆற்காடு ஒன்றியத்தைப் பற்றி கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியிருப்பதைப் பற்றிய தனிக் கேள்வி போட்டால் விவரங்களைத் தரலாம்.

இந்தியா போர்ஜ் தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதி

382—(*வினா எண் 10056) திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இந்தியா போர்ஜ் தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்குவதாக அரசு அறிவித்த ரூ. 200/- இன்னும் அத்தொழிலாளர்களுக்குக் கிடைக்காததால் உடனடியாக அந்த நிவாரணத் தொகையை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா போர்ஜ் தொழிலாளர்களுக்கு முதலமைச்சரின் நிவாரண நிதியில் இருந்து தலைக்கு ரூ. 200/- வீதம் 498 தொழிலாளர்களில் 484 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவலுக்கு நன்றி. நான் கொடுத்த கேள்வி சற்று முன்பாக வந்தது. பலருக்கும் கிடைக்காதது பற்றியதாகும். பாக்கியுள்ளவர்களுக்குக் கிடைப்பதற்கு 3 ஆண்டுகளுக்கு மேலாக இந்தத் தொழிற்சாலை மூடப்பட்டு இருப்பதைத் கணக்கிலே எடுத்துக்கொண்டு மீண்டும் அவர்களுக்கு ஒரு தொகையை வழங்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையான பரிகாரம், முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து அவ்வப்போது கொடுத்துக் கொண்டிருப்பது அல்ல. இந்தத் தொழிற்சாலையைத் திறப்பதில்தான் உண்மையான பரிகாரம் இருக்கிறது. அந்தத் தொழிற்சாலையை மூடியதற்கான காரணம் என்ன என்பதை அறிந்து அதற்குத் தகுந்தபடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1987 ஏப்ரல் 23]

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 ஆண்டுகளுக்கு மேலாக மூடப்பட்டிருக்கிற இந்தத் தொழிற்சாலையில் பணியாற்றிய 17 தொழிலாளர்கள் வறுமையின் காரணமாக இறந்து விட்டார்கள். அது சம்பந்த மாகவும், பல சந்தர்ப்பங்களிலே அந்தத் தொழிற்சாலையைத் திறப்பது சம்பந்தமாகவும் பல பரிசீலனைகள் நடந்தும் திறக்கப் படாமலே இருக்கிறது. அரசு முன்முயற்சி எடுத்து அந்த ஆலையைத் திறப்பதற்கும் அந்த ஆலை நிர்வாகத்தை மேற்கொள்வதற்கு ஒரு ஐ ஏ. எஸ். அதிகாரியைப் போட்டு அதை நடத்துவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, வறுமையுற்று இறந்தவர்களின் விவ ரம் என்னிடத்தில் இல்லை. அந்தத் தொழிற்சாலையை நடத்துவதற்கு, அங்கேயுள்ள தொழிற்சங்கத்திலே ஏற்கனவே இருக்கிற சங்கம் சில விதிமுறைகளைச் சொல்லி வருகிறது. அதற்கிடையில் தொழிலாளர்கள் எல்லாம் ஒரு குழுவாகச் சேர்ந்து திரு. ஏ. எம். கோபு மூலமாக அந்தத் தொழிற்சாலை யைத் திறப்பதற்கு முயன்று வருகிறார்கள். தொழிலாளர் நல ஆணையர் அதற்கான பேச்சு வார்த்தை நடத்தி வருகிறார்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியுதவி பற்றிய கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கிற நேரத்திலே மூடப்பட்டது ஏன் என்பது பற்றி ஆய்வு செய்ததற்குப் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். 3 ஆண்டுக்காலமாக மூடப்பட்டுக் கிடக்கிற ஒரு தொழிற்சாலை பற்றி இன்னமும் ஆய்விலே இருக்கிறது என்று சொல்கிறபோது ஆய்வு என்ற வார்த்தைக்கே அர்த்தமில்லாமல் போய்விடும். எனவே அருள் கூர்ந்து இந்த மாநில அரசு—எந்தவிதமான தொழிலாளரும் கார ணம் இல்லாமல் முதலாளிகள் தங்கள் பங்குத் தொகைகள் தக ராறால் அந்தத் தொழிற்சாலையை மூடிவிட்டு பிற பகுதி களில் தொழிற்சாலைகளை நடத்திக்கொண்டு இருப்பதை —ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது என்ற முறையிலே அந்தத் தொழிற்சாலையை அரசே ஏற்று நடத்த குறுகிய கால வரம்பிற்குள் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு, இறந்துவிட்ட தொழிலாளர்கள் யார் என்பதைக் கணக்கில் எடுத்து அவர்கள் குடும்பங்களுக்கு விசேஷமான தொகையை நிவாரணமாக அளிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலையை ஏற்று நடத்துவது சம்பந்தமான கேள்வியைத் தனியாக சம்பந்தப்

பட்ட அமைச்சரிடத்தில் போட்டு பதிலைப் பெறவும். இறந்துவிட்ட தொழிலாளர் குடும்பங்களுக்கு நிதிவசதி என்று நாம் தனியாகத் தருவதில்லை, இதுபோன்று மூடிய தொழிற்சாலையில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் துயருறுவதன காரணமாக முதலமைச்சர் நிதியிலிருந்து விசேஷமாக மனிதாபிமான அடிப்படையில் தரப்படுகிறது.

திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, இந்தத் தொழிற்சாலை நீண்ட நாட்களாக மூடப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் வறுமையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையை அரசே ஏற்று நடத்துவதற்கு முன்வருமா ? அல்லது தொழிலாளர்கள் அதை நடத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா ? அரசு அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்காக இதுவரையிலும் என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையில் இதுசம்பந்தமான கேள்வியைப் போட்டு பதிலைப் பெறலாம்.

ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்தல்

383—(*வினா எண் 10067) திரு. கே. அன்பழகன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று வட சேலம் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான நகல் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): வட சேலம் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் 23–8–1985-ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்மீது, முன் மொழிவுகளை அனுப்பிவைக்குமாறு, ஓமலூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுரை வழங்கியுள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து முன்மொழிவுகள் அரசுக்கு வரப்பெற்றதும், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.